www.freetnbooks.com

**8 P**

Register No. 8422

# காலாண்டுத் தேர்வு – 2025

## தமிழ்

நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

15x1=15

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ...........
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. பெரிய கப்பல்கள் ........... மீது செல்லும்
அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி
3. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ....... காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
4. கழுத்தில் சூடுவது
அ) தார் அ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை
5. கிழிந்து + எழில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) கிழிந்து எழில் ஆ) கிழிந்தெழில் இ) கிழிந்தொழில் ஈ) கிழிந்ததில்
6. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ..... நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
7. புகழாலும் பழியாலும் அறியப்படுவது
அ) அடக்க முடைமை ஆ) நாணுடைமை இ) நடுவு நிலைமை ஈ) பொருளுடைமை
8. நம்மை ....... பொறுத்துக் கொள்ள வேண்டும்.
அ) இகழ்வாரைப் ஆ) அகழ்வாரைப் இ) புகழ்வாரைப் ஈ) மகிழ்வாரைப்
9. 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) கோ + அப்பா ஆ) கோயில் +லப்பா இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா
10. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
11. மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினை முற்று
அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது

பாடலைப் படித்து (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடையளி

கத்தியைத் தீட்டாதே - உந்தன்
புத்தியைத் தீட்டு
கண்ணியம் தவறாதே - அதிலே
திறமையைக் காட்டு!

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
13. இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
14. இப்பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.
15. எதைத் தீட்டாதே? எதைத் தீட்டு? என்று ஆலங்குடி சோமு கூறுகிறார்?

### பகுதி - II பிரிவு - 1

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. வினா எண் 21க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்** 4x2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.: அ) கலித்தொகை எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
ஆ) திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும்.
17. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
18. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
19. அன்பு, பண்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
20. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
21. தன் குற்றம் - என்று தொடங்கும் திருக்குறள்.

### பிரிவு - 2

5x2=10

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடை எழுதுக.**

22. வியங்கோள் வினை முற்று விகுதிகள் யாவை?
23. பிறிது மொழிதல் அணி என்பது யாது?
24. கலைச்சொல் தருக. : அ) Talent ஆ) Translation



www.freetnbooks.com | FREETNBOOKS
Scanned with Cam

25. பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக. : அ) பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும். ஆ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
26. வினை முற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக: எ.கா. நடக்கிறது-நட அ) போனான் ஆ)வருக
27. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
மா தேன் குருவி கூடு சீட்டு மலர் மரம் கனி காய் முட்டை தேன் செம்மை
28. அகர வரிசைப் படுத்துக : எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி ஏழ்கடல், இரண்டல்ல. ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்

## பகுதி - III, பிரிவு - 1

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

29. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
30. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன் யாவை?
31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
பாரதிதாசன் புதுச்சேரியில் பிறந்தவர். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்புரத்தினம் என்பதாகும். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாக இவர் தமது பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார். ஆ) பாரதிதாசன் எங்கு பிறந்தார்?
ஆ) பாரதிதாசனுக்கு பெற்றோர் இட்ட பெயர் என்ன? இ) பாரதிதாசன்-பெயர்க் காரணம் எழுதுக

## பிரிவு - 2

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்** **2x3=6**

32. ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்தவை எவை?
33. தமிழ் வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.
34. 'வாழ்க நிரந்தரம்' என்று தொடங்கும் பாரதியார்பாடல் (அல்லது) 'மாமழை போற்றும்' என்று தொடங்கும் இளங்கோவடிகள் பாடல்.

## பிரிவு - 3

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **2x3=6**

35. அ) சிரம் என்பது ......... (தலை/தளை) ஆ) பூ .......... வீசும். (மனம்/ மணம்)
இ) பறவை வானில் ........... (பறந்தது/ பரந்தது)
36. பொருத்துக.
அ) க் ங் - நாவின் இடை, அண்ணத்தின் இடை.
ஆ) ச் ஞ் - நாவின் நுனி, அண்ணத்தின் அனி.
இ) ட்,ண் - நாவின் முதல், அண்ணத்தின் அடி.
37. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக. (கள், க்கள், ங்கள், ற்கள்)
அ) கிழமை - ஆ) பா - இ) சொல் -

## பகுதி - IV

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (கற்பவை கற்றபின் சிந்தனை வினா). 5x5=25**

38. தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமைகளாக நீங்கள் கருதுவன யாவை?
39. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.
40. ஒரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக
41. நீங்கள் மருத்துவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களை எழுதுக.
42. அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகள் ஐந்து எழுதுக.
43. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.

## பிரிவு - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3x8=24**

44. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. ''வெட்டுக்கிளியும் சருகுமானும்'' கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி வரைக.
46. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக : நூலகம்
முன்னுரை-நூலகத்தின் தேவை-வகைகள்-நூலகத்தில் உள்ளவை. படிக்கும் முறை முடிவுரை

(அல்லது)

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam